DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 5/2017 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | இராமசாமி |
| Father's Name | : | காசி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.01.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேப்பங்குளத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.04.2015 ம் தேதியில் காலை 7.30 மணியளவில் எங்கள் ஊர் பஞ்சாயத்து அலுவலக கட்டிட அருகாமையில்உள்ள டீக்கடையில் டீ அருந்திகொண்டு இருந்தேன். அந்த நேரம் 3 நபர்கள் அங்கு வந்து கிராவல் மண் அள்ளுவதை நீ தான் போலீஸ்க்கு தகவல் கொடுத்தாய் என்று சொல்லி மணிகண்டனும், கண்ணதாசனும் இருவரும் இவனை விட்டால் இனி மேல் மண் அள்ள முடியாது என்று சொல்லி என்னை முருகதாஸ் வெட்ட வந்தார். அதனை நான் தடுக்கும் போது வலது தொடையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அந்த நேரம் அந்த வழியாக வந்தவர்கள் வைராப்பட்டிஅருளாந்து மகன் ஜேம்ஸ் மற்றும் சொர்ணலிங்கம், ஏந்தலைச் சேர்ந்த கருப்பையா ஆகியோர் விலக்கிவிட்டனர். நான் அருகில் இருந்த டீ கடைக்குள் உள்ளே சென்று மறைந்து கொண்டேன். அந்த நேரத்தில் மணிகண்டன், கண்ணதாசன் இவனை விட்டால் மண் அள்ள முடியாது என்று சொல்லிக்கொண்டு இவனை இத்தோடுவெட்டி குடலை உருவி மாலையாக போடவேண்டும் என்று கூறி அசிங்கமாக தகாத வார்த்தைகளால் பேசினார்கள். உடனே நான் கல்லல் காவல்

நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் கொடுத்த பின்பு என்னை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என் உறவினர்கள் அழைத்துச் சென்றார்கள். அங்கு எனக்கு 7 தையல்கள் போட்டார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீஸார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

1. காவல் நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்கு எப்படி சென்றேன் என்றால் அந்த வழியாக வந்த ஆட்டோவில் சென்றேன். நான் நாச்சாங்குளத்தில் இருந்து வேப்பங்குளத்திற்கு வந்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றும் அவ்வாறு நாச்சாங்குளத்திலிருந்து வேப்பங்குளத்திற்கு எந்த வாகனத்தில் வந்தேன் என்றால் நான் வாகனத்தில் வரவில்லை வீட்டில் இருந்துதான் வந்தேன். நான் கொடுத்த புகார் மனுவில் நாச்சாங்குளத்தில் இருந்து வேப்பங்குளத்திற்கு சென்றதாக உள்ளது என்றால் நான் கொடுத்த புகாரினை எழுதியவர்கள் அவ்வாறு மாற்றி எழுதியிருப்பார்கள். நான் புகாரை படித்துப்பார்க்கவில்லை. புகாரில் எழுதியவர் என்ன விவரம் உள்ள என்ற விவரம் தெரியுமா என்றால் 10 வருடங்கள் ஆகி விட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை.

2. இந்த புகாரை எங்கு வைத்து யார் எழுதினார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து எனது தம்பி மணிகண்டன் எழுதினார். அவர்தான் அ.சா.ஆ.1 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மருத்துவமனை சென்று விட்டு புகார் அளித்தேனா அல்லது காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டு மருத்துவமனை சென்றேனா என்றால் காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு மருத்துவமனை சென்றேன். புகார் அளிக்க காவல் நிலையம் சென்ற போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 8.30 மணி இருக்கும். நான் மதியம் 2.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ நான் மதியம் 2.30 மணியளவில் புகார் கொடுத்திருந்ததாக சொல்லியிருந்தார் அது தவறு என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க ஆட்டோவில் சென்றதாக புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு செல்லும் போது

9.00 மணியிருக்கும். நான் எத்தனை நாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 1 வாரம் இருக்கும்.

3. மேல் சிகிச்கைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன், அங்கு ஒரு நாள் இருந்தேன். மருத்துவர் எனக்கு கொடுத்த ஏ.ஆர்.பதிவேட்டில் என்னை அன்றே மேல்சிகிச்கைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு செல்ல எழுதிக்கொடுத்தார்கள் என்றும், ஆனால் சிவகங்கை செல்லவில்லை என்று கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் இல்லை, நான் சென்று 1 நாள் சிகிச்சை மேற்கொண்டேன். நான் உண்மையிலேயே சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டால் அதற்கான மருத்துவ அறிக்கையினை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல, நான் சிகிச்சை மேற்கொண்டேன். நான் மருத்துவமனையில் சென்று மருத்துவரிடம் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு சொன்னேனா என்றால் மருத்துவர் என்னிடம் கேட்கவில்லை நான் சொல்லவில்லை.

4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் டீக்கடையா இல்லை பஞ்சாயத்து கட்டிடமா என்றால் அதுபஞ்சாயத்து கட்டிடம் அருகே உள்ள டீக்கடை ஆகும். பஞ்சாயத்து கட்டிடமும் டீக்கடையும் எதிரே உள்ளதா அல்லது அருகே அருகே உள்ளதா என்றால் அருகருகே உள்ளது. வேப்பங்குளத்திற்கும் தேவகோட்டை ரோட்டிற்கும் தெற்குப்பகுதியில் பிரேமா டீக்கடை என்று ஒன்று இல்லை என்று சொன்னால் உள்ளது இரண்டும் தெற்குப்பகுதியில் வடக்கு நோக்கி உள்ளது. டீக்கடையும் பஞ்சாயத்து கட்டிடமும் வடபகுதியில் இல்லை தென்பகுதியில் தான் உள்ளது என்றால் சரிதான். சாட்சி சொர்ணலிங்கம் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் மனைவியின் அண்ணன் ஆவார். நானும் எதிரியும் பேசிக்கொள்வோமா என்றால் பேசிக்கொள்வோம். எனது அண்ணன் பெயர் நாகநாதன் என்றால் சரிதான். எனக்கு தெம்மாவயல் என்ற கிராமத்தில் தோட்டம் உள்ளது என்றால் சரிதான்.

5. எதிரிகள் முருகதாஸ் மற்றும் கண்ணதாசன் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். எனது அண்ணன் நாகநாதன் 1ம் எதிரிக்கு சொந்தமான 20 தண்ணீர் பைப்புகளை வாங்கிச்சென்று எனக்கு பாத்தியப்பட்ட தெம்மாவயல் தோட்டத்தில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது சரியல்ல என்றும் அவ்வாறு 20 தண்ணீர் பைப்புகளையும் எனது தோட்டத்தில் வைத்து கொண்டேன் என்றும் அதனை

1, 2 எதிரிகள் திரும்ப கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட பிரச்சனை தொடர்பாக 3ம் எதிரியும் என்னிடம் கேட்டார் என்றும், எனவே எதிரிகளை பழிவாங்கும் எண்ணத்துடன் எனக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யாக புகார் மனுவினை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தொடையில் ஏற்பட்ட காயம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், எதிரிகளை சிக்க வைக்கவேண்டும் என்ற காரணத்திற்காக நானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. 1 மற்றும் 2 எதிரிகள் தேவகோட்டையில் வசித்து வருகிறார் என்ற விவரம் தெரிந்தும் 1, 2 எதிரிகள் வேப்பங்குளத்தில் மணல் திருடியதாக சொல்லி நான் வேண்டுமேன்றே புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, JCB, டிப்பர் அனைத்தும் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. எந்த வழக்கில் கைப்பற்றப்பட்டது என்றால் இந்த வழக்கில் தான் கைப்பற்றப்பட்டது. எனக்கு உண்மையிலேயே காயம் ஏற்பட்டு இருந்தால் நான் தொடர்ந்து சிகிச்சையில் இருந்து இருப்பேன் என்றும் எனக்கு எந்த காயமும் ஏற்படததால் தான் நான் மருத்துவமனையில் சேர்ந்த அன்றே மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் ஆட்டோவில் காவல் நிலையம், மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறுசொல்கிறேன் என்று சொன்னால் சம்பவம் நடந்து 10 வருடம் ஆகி விட்டதால் என் ஞாபகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

7. நான் எனக்கு 7 தையல்கள் போட்டது எல்லாம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் புகாரில் சொன்னது போல் என்னை எதிரிகள் ஆபாசமாக பேசவும் இல்லை என்னை மிரட்டவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை,  நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.